Regd. No. M. 4078

ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

।। वैद्यचन्द्रिका ।।

வைத்ய சந்த்ரிகா

தமிழ் நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்
ஆதரவில் நடந்துவரும் மாதப் பத்ரிகை.

Vol. 8 | December, 1946 | Nos. 12

ஆசிரியர் ;

V. B. நடராஜ சாஸ்த்ரி, ஆயுர்வேதாசார்ய.
வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.

ப்ரகாசகர் : பண்டித ஸ்ரீ. மெ. ஸுந்தரராஜாசார்யர்.

விஷயங்கள்.

ஆரோக்கியசந்த்ரிகா அநுபந்தம்.	1—8
ஸ்வஸ்த லக்ஷணம்	
ஸ்ரீ நடராஜ சாஸ்த்ரீ	1
பிரவாஹிகா ,,	4
ஆயுர்வேதம்—2. க்ருஷ்ணாத்ரேயன்.	1
பாண்டுவில் ஓஜஸ்—ஓர் சந்தேஹம்	7
பாண்டுரோகம். ஸ்ரீ எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ	10
குறிப்புகள்.	13
செய்திகள்.	16

வருஷச்சந்தா ரூ. 3—0—0

குறிப்பு

வைத்ய சந்த்ரிகையில் பிரசுரம் செய்ய வேண்டிய விஷயங்கள், கட்டுரைகள் முதலிய அநுப்ப வேண்டிய விலாஸம் :—

ஆசிரியர், வைத்ய சந்த்ரிகா,

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சினுப்பள்ளி.

வைத்ய சந்த்ரிகையின் சந்தா, விளம்பர விகிதங்கள் மற்றும் தமிழ் நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் ஸகல விஷயங்களையும் குறித்து எழுத வேண்டிய விலாஸம் :—

வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராமசர்மா,

பொதுக் கார்யதர்சி,

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,

கரூர். (திருச்சி ஜில்லா)

ஸ்ரீ தந்வந்தரயே நம:

ஆரோக்கிய சந்த்ரிகா—அநுபந்தம்.

ஸ்வஸ்த லக்ஷணம்.

(ஸ்ரீ நடராஜ சாஸ்த்ரீ.)

'ஸ்வஸ்தன்' என்றால் சுகமாய் எவ்வித துக்கமுமின்றி இருக்கிறான் என்று பொருள். ஸ்வஸ்த நிலைக்கு என்ன லக்ஷணங்கள்? எவனை 'ஸ்வஸ்தன்' என்று கூறலாம்? என்ற கேள்விக்கு வெளி நாட்டு வைத்திய சாஸ்த்ரங்கள் கூறும் பதில்— உடலிலுள்ள எல்லாக் கருவிகளும் தன் தன் கார்யங்களை ஒழுங்காய்ச் செய்வது, ரக்தம் முதலிய தாதுக்களின் அளவு குறையாதிருத்தல், மலம் மூத்ரம் முதலிய கழிவு பதார்த்தங்களின் சரியான வெளிப்பாடு, பசி, தூக்கம், மேலும் சரீரத்தின் வயது உயரத்திற்கு ஏற்ற உடலின் நிறை இவைகள் எல்லாவற்றுக்கும் விகிதாசாரக் கணக்குப் போட்டு இவைகளில் ஒரு தோஷமுமில்லாவிடில் 'ஸ்வஸ்தன்' என்று சொல்ல வேண்டும்— என்பதே. ஆனால் நாம் உலகில் ப்ரத்யக்ஷமாய் பலரிடத்தில் பார்ப்பது இந்த வைத்ய சாஸ்த்ரங்கள் சொல்லும் லக்ஷணத்துக்கு விருத்தமாயிருக்கிறது. சரீரத்தில் பரீக்ஷைகளால் கண்டு பிடிக்கக் கூடிய கோளாறுகள் ஒன்றுமே யில்லை. ஆகாரம் பலம் எல்லாம் சரியாயிருக்கிறது. ஆனாலும் துக்கமின்றி சுகமாயிருக்கும் ஒரு சந்தோஷ உணர்ச்சியில்லை. ஆகவே வெளி நாட்டு வைத்ய சாஸ்த்ரங்கள் கூறும் 'ஸ்வஸ்த' லக்ஷணம் முற்றிலும் சரியென்று சொல்வதற்கில்லை.

ஆயுர்வேதம் சொல்லும் 'ஸ்வஸ்த' லக்ஷணமாவது—

समदोषः समाग्निश्च समधातुमलक्रियः ।
प्रसन्नात्मेन्द्रियमनाः स्वस्थ इत्यभिधीयते ॥

ஸுச்ருத. ஸூ. அ. 15.

தேஹத்தில்— வாத பித்த கபங்கள் ஆகிய மூன்று தோஷங்கள், பூதாக்னிகள் ஐந்து, தாத்வக்னிகள் ஏழு, காயாக்னி ஒன்று— ஆக பதிமூன்று வித அக்னிகள், ரஸம் ரக்தம் தசை மேதஸ் அஸ்தி மஜ்ஜை சுக்ரம்— ஆகிய ஏழு தாதுக்கள், உபதாதுக்கள், மலம் மூத்திரம் வியர்வை முதலிய மலங்கள் இவைகள் யாவும் ஏற்றக் குறைவின்றி ஸம நிலையிலிருக்க வேண்டும். எவ்விதக் கெடுதலுமின்றி அதனதன் இயற்கை கார்யங்களை ஒழுங்காய்ச் செய்து கொண்டிருக்க வேண்டும். பஞ்சேந்த்ரியங்கள், மனஸ், ஆத்மா இவை தெளிவு பெற்று தூய்மையுடன் விளங்க வேண்டும். இப்படிப் பட்டவன் 'ஸ்வஸ்தன்' என்று கூறப் படுகிறான் என்று இந்த சுலோகத்தின் சுருக்கமான பொருள். தோஷங்கள் தாதுக்கள் அக்னிகள் மலங்கள் இவைகளைப் பற்றி விவரிக்க இங்கு அவகாசமில்லை. முக்கியக் கருத்து என்னவெனில்— உடற்கருவிகளும் தாதுக்களும் அளவிலும் காரியத்திலும் கேடின்றி ஒழுங்காய் இருந்தால் மட்டும் ஒருவனை 'ஸ்வஸ்தன்' எனக் கூறமுடியாது. இந்த்ரியங்கள், மனது, ஆத்மா இவைகளும் தெளிவு பெற்று தூய்மை நிலையில் இருந்தால் தான் 'ஸ்வஸ்தன்' என்று கூறமுடியும் என்பதே. ஒருவனுக்கு உடலில் ஒரு விதக் கோளாறுமில்லை. உறுப்புக்கள் எல்லாம் ஒழுங்காய் வேலை செய்கின்றன. இந்த்ரியங்களுக்கும் மனதுக்கும் தெளிவு இல்லையாகில் இவன் ஸ்வஸ்தன் என்று சொல்ல முடியாது. உடலின் உறுப்புகளில் கெடுதி யிருப்பினும் யோகாப்யாஸ பலத்தினால் யோகியாயிருப்பான் அக் கெடுதலின் விளைவை அநுபவியாமலோ பாராட்டாமலோ இருப்பினும் அப்பொழுதும் 'ஸ்வஸ்தன்' என்று சாஸ்த்ரப்படி சொல்லவியலாது. சரீரம், இந்த்ரியங்களுடன் கூடிய மனது இரண்டும் நிர்விகாரமாய் இயற்கை நிலையிலிருந்தால் மட்டும் 'ஸ்வஸ்தன்' எனக் கூறத் தகும் என்று ஆயுர்வேத ஸித்தாந்தம். மனிதனின் ஆரோக்கிய விஷயத்தில் 'மனது'க்கு ஆயுர்வேதத்தில் அதிக ப்ராதான்யம் அளிக்கப் பட்டிருக்கிறது. இதன் தத்துவம் என்ன? என்பதே இங்கு முக்கியமாய் கவனிக்க வேண்டியதாகும்.

தோஷ தாது மலங்களுடைய சம நிலை கிரியைகள் பசு பக்ஷி முதலிய எல்லா ஜீவராசிகளுக்கும் மனித வர்க்கத்துக்கும் ஒரே விதமாகப் பொதுவானது. மிருகங்களுக்கும் ஆரோக்கியம் தோஷ தாதுக்களுடைய சம நிலைக் கிரியைகளிருந்தால் தான் இருக்கிறது. மானிடர் விசிஷ்டமான புத்தி சக்தி பெற்றிருக்கும் ஒரே ஒரு காரணத்தால் மட்டுமல்லவோ மிருகம் முதலிய இதர ஜீவ ராசிகளைப் பார்க்கிலும் பெருமை பெறப் பாத்திரமாகிறார்கள். ஆதலால் மனிதருக்கு 'ஸ்வஸ்த' லக்ஷணம் சொல்லும் பொழுது புத்தியின் தன்மையைச் சேர்க்காமல் விட்டால் மிகுந்த மதியீனமாகாதா? வெளி நாட்டு வைத்திய சாஸ்திரங்கள் சரீரத்தின் ஸ்தூலாம்சமான நிறை உயரத்தில் கவனம் விசேஷமாய் செலுத்துகின்றன. இது மனிதருக்கும் பொதுவாயிருப்பினும் மனிதர் தனி முறையில் புத்தி இந்த்ரியங்களுடைய வன்மை பெற்றுள்ளதால் அவைகளுடைய தூய்மையையும் சேர்த்து ஆயுர்வேதத்தில் ஸ்வஸ்தலக்ஷணம் சொல்லியிருப்பது ஆயுர்வேதத்தின் விஜ்ஞான மகத்துவம்.

ஒரு ஸந்தேஹம் எழலாம். தேஹத்தில் தோஷ-தாது-அக்னி-மலங்களுடைய ஸம நிலை க்ரியைகள் இருந்தால் மனோ நிலையும் தானாகவே தூய்மை பெறுவது சொல்லாமலே விளங்கும். மேலும் வைத்திய சாஸ்த்ரம் தேஹ தத்துவத்தை போதிக்கிறது. இந்திரிய மனோ தத்துவங்களையோ ஆத்ம தத்துவத்தையோ போதிக்க வேண்டிய அவசியம் வைத்திய சாஸ்த்ரத்திற்கு இல்லை. ஆதலால் சரீர தாதுக்களுடைய ஆரோக்கியத் தன்மையிருந்தால் 'ஸ்வஸ்தன்' என்று கூறுவது வைத்திய சாஸ்த்ரத்தைப் பற்றிய வரையில் ஏன் போதாது? இந்த சந்தேஹத்திற்கு சமாதானம் முன் பாராவிலேயே சொல்லப்பட்டு விட்டது. மேலும், மனிதன் தேஹத்தில் மனது பிரதான அங்கமானதால் தோஷ தாது மலங்களுடைய சம நிலை க்ரியைகளால் மட்டும் அதாவது சரீர ஆரோக்கியத்தினால் மட்டுமே மனதின் தெளிவு முற்றிலும் பெற்றிருத்தல் என்பது எல்லாவிடத்திலும் நிச்சயமில்லாதிருத்தலாலும், இன்னும் பல வித ப்ரயோஜனங்களைப் போதிப்பதற்காகவும் மனதைப்

பற்றிய சில விஷயங்களை மனித வர்க்கத்தினருக்காக ஏற்பட்டுள்ள வைத்தியசாஸ்த்ரத்தில் புறக்கணிக்க முடியாது.

பல வித ப்ரயோஜனங்கள் எவை? கேளுங்கள். தோஷ தாது மலங்களுடைய எவ்விதமான சமமான நிலை ஒழுங்கான கார்யங்களை மனிதன் அடைய முயல வேண்டும்? புத்திக்கும் ஞானேந்த்ரியங்களுக்கும் ஆத்மாவுக்கும் பிரஸாதம்—தெளிவு நிரந்தரமாய் உண்டு பண்ணக் கூடிய ஸம நிலை கார்யங்களையே அடைய வேண்டும். அதற்குத் தகுந்த ஆஹார—ஆசாரங்களையே அநுஷ்டிக்க வேண்டும். புத்திக்குத் தெளிவை யுண்டாக்காது சரீர பலத்தை மட்டும் போஷிக்க வல்ல ஆஹாராதிகளால் மிருக பலத் தன்மையை மனித வர்க்கத்தில் வளர்ப்பது மகத்தான தோஷத்தையே விளைவிக்கும். மனிதப் பிறவியின் பயனைப்பெறும் லக்ஷியத்துட-னிருப்பவருக்கு சரீரத்தின் ஆரோக்கியம் எவ்விதம் அத்யாவச்யமோ, அவ்விதம் ஆத்மா புத்தி இந்த்ரியங்களுடைய தூய்மையும் அத்யாவசியம். மனது இந்த்ரியங்களின் பலம்– சக்தி என்றெல்லாம் சொல்லாமல் பிரஸந்ந— தூய்மைபுற்ற ஆத்மேந்த்ரிய மனஸ் பெற்றவன் 'ஸ்வஸ்தன்' என்று சொல்லியுள்ளது எவ்வளவு அழகு! மனிதனை எவ்வளவு உயர்ந்த லக்ஷ்யமுள்ளவனாக ஆக்க விரும்புகிறது ஆயுர்வேத சாஸ்த்ரம்!

பிரவாஹிகா	ஸம்ஸ்க்ருதம்	V.B. நடராஜ சாஸ்த்ரி.
சீதபேதி—வயிற்றுக் கடுப்பு	தமிழ்	
DYSENTERY	இங்க்லீஷ்	

இந்த மழை காலத்தில் நாடெங்கும் **பிரவாஹிகாரோகம்** மிகுதியாய் ஏற்பட்டு பீடிப்பது வழக்கம். இதன் லக்ஷணமும் சிகித்ஸையும் சந்த்ரிகையில் ஸமீபத்தில் விரிவாய் வெளியாகியிருக்கிறது. வைத்ய சாஸ்த்ரத்தில் பயிற்சி பெற்றவருக்கு விசதமாய் விளங்கக் கூடிய நடையிலிருப்

பினும் சாதாரணப் பொது மக்களும் அந்த வியாஸத்தைக் கவனித்துப் படித்துப் பார்ப்பதினுல் நல்ல பயனை அடைய முடியும்.

இங்கு இந்தச் சிறு கட்டுரையில் பிரவாஹிகா ரோகம் வராமல் தடுத்துக் கொள்ளும் சில வழிகளையும் வந்தவுடன் செய்யக் கூடிய சில க்ருஹ சிகித்ஸை முறைகளை மட்டும் சுருங்கச் சொல்லுவோம். பிரவாஹிகை இயற்கையிலே மிகக் கடினமான நோய். வேகத்தில் ஏற்படும். சீக்கிரம் குணமடைவதில்லை. சமனமாகி சமனமாகி திரும்ப ஏற்படும் இயல்புள்ளது. சில இடங்களில் நீண்ட காலம் தொடர்ந்து வாட்டுகிறது. பாண்டு (சோகை—Anaemia) யக்ருத்—பிலீஹ விருத்தி (Enlargement of Liver and Spleen) குதப்பிரம்சம் (ஆஸனம் தள்ளுதல் Prolapsus Ani) கிரஹணீ முதலிய கடுமையான உபத்திரவங்களும் பிரவாஹிகைக்குப் பின் சரியான சிகித்ஸை செய்யாவிடில் ஏற்பட்டுத் துன்புறுத்துகின்றன. விசேஷமாய்க் குழந்தைகளுக்கு பிரவாஹிகை சரியாக சிகித்ஸை செய்யப்படாவிடில் 'கட்டி' (liver enlargement) என்று இன்று உலகில் வழங்கும் யக்ருத்—உதர வியாதியானது 100—க்கு 80 இடங்களில் ஏற்படுவதென்பது எமது நீண்ட கால அனுபவம். ஆதலால் பிரவாஹிகை நோய் ஏற்பட்டவுடனே சிறிதும் தாமதியாமல் தகுந்த வைத்தியரிடம் காண்பித்து சிகித்ஸை பெறவேண்டியது மிக மிக அவசியம். ஆரம்பத்திலேயே வைத்யம் செய்து கொண்டால் எளிதில் அநுகூலமாகும். வைத்தியரிடமும் காட்டாமல், அபத்தியமும் பண்ணிக் கொண்டிருந்தால் வியாதி முற்றிக் கடுமையான சிகித்ஸை செய்ய வேண்டி வருகிறது. பீடை மிக அநுபவிக்க நேரிடுகிறது. சில ஸமயம் சிகித்ஸைக்குமடங்காமல் நோய் மீறி ஆயுளையும் அபஹரிக்கிறது.

பிரவாஹிகா நோய் வராமல் தடுப்பதெப்படி? முதலில் இந்த நோய் ஏற்படும் காரணங்களைத் தெரிந்து கொள்ளுக. நோய் ஏற்படும் மூலகாரணங்களைத் தடுப்பதுதானே வியாதி வராமல் காப்பாற்றும் உபாயம். மலச் சிக்கல்

மிகவும் வரட்சியை அல்லது அத்யுஷ்ணத்தை உண்டாக்கக் கூடிய மிளகு மிளகாய் போன்ற கடுங்கார உணவுகள், மிகு தியான கொழுப்பு சேர்ந்த உணவுகள், மல மூத்திரங்களை அடக்குதல், விரேசனத்தின்* தோஷங்கள், சில உப்புக்க ளினால் கொஞ்சம் கொஞ்சமாய் பேதியாகுதல், நேர்வாளம் முதலிய க்ரூர பேதியால் கத்தரிப்பு வலியுடன் பேதியாகு தல்— இவைகளே முதலில் சரீரத்தில் ஏற்பட்டு கவனிக்கப் படாமலிருந்தால் பிரவாஹிகா வியாதி ஏற்பட ஏதுவாகின் றன. இங்கு கூறிய மலச்சிக்கல் முதலிய காரணங்களை ஆரம்பத்திலேயே தடுத்துக் கொண்டு ஆஹார விஷயத்தி லும் ஜாக்கிரதையாக இருந்தால் பிரவாஹிகா ரோகம் ஏற்படாமல் தடுத்துக் கொள்ள முடியும்.

பிரவாஹிகை ஒரு தொத்து நோய். பிரவாஹிகா வியாதிக்காரன் கழிந்த மலத்தில் ஏராளமாய் இருக்கும் ஒரு வித ஸூக்ஷ்மக் கிருமி குடிநீர் முதலான வழியால் சரீ ரத்தினுள்ளடைந்து பிரவாஹிகா வியாதியை உண்டு பண் ணுகிறது. ஆதலால் பிரவாஹிகா மலத்தை குடி நீர் முத லியதுடன் சேர விடாதபடி பந்தோபஸ்துடன் சுத்தம் செய்ய வேண்டும். மலத்தையும் மலத்தைத் துடைத்த சிறு துணி முதலியதையும் நெருப்பில் பொசுக்கி விடுவது உத்தமம். நோயாளியின் துணிகளை சவர்க்காரம் கலந்த வெந்நீரில் வேக வைத்துப் பின் சுத்த நீரில் துவைத்து வெய்யிலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். நோயாளிக்கு சுச்ரூஷை செய்பவர் தன் கை கால் அங்கங்களை உடனுக் குடன் வெந்நீரில் கழுவி சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும். நோயாளிக்கும் சுச்ரூஷை செய்பவருக்கும் அலம்ப வைக்கும் ஜலத்தைக் காய்ச்சி அதில் ஒரு படி ஜலத்திற்கு 5–6 அரிசியிடை வீரம் அல்லது மயில்துருசுப் பொடியைக் கரைத்துத் தனியாக வைத்துக் கொண்டு உபயோகித்தல் மிக நல்லது. சுச்ரூஷை செய்பவர் கை காலில் மிகச் சிறிதளவு வேப்பெண்ணெயைப் பூசிக்கொண் டால் பிரவாஹிகாக் கிருமி அணுகாது.

---

* விரேசனம்—பேதிக்கு எடுத்துக்கொள்வது. (PURGATIVES.)

பிரவாஹிகா, காலாதிஸாரம் (காலெரா) முதலிய தொத்துநோய்க் கிருமிகளைக் கொல்ல வல்ல மருந்து சரக்குகளினால் தூபம் போடுதல்.

வேப்பம்பட்டை	சாம்பிராணி	கந்தகம்
கடுகு	சந்தனம்	ஜடாமாம்ஸீ
வசம்பு	அகில் கட்டை	வெண்கோஷ்டம்
குங்கிலியம்	மஞ்சள்	வாகைமரப்பட்டை

இந்தப் பன்னிரண்டு சரக்குகளை சமனிடையாக ஒன்று சேர்த்து தூள் செய்து தணலில் தூபம் போடவும். 12 சரக்குகளும் பூர்த்தியாகக் கிடைக்காவிடில் கிடைத்தவைகளை மட்டும் சேர்த்தும் தூபமிடலாம். இன்னும் பெரிய தூபயோகங்களுமுண்டு. சுலப முறை இங்கு எழுதப்பட்டது. காலை மாலை நேரங்களில் வீட்டின் உள்ளும் புறமும் மாட்டுக் கொட்டத்திலும் தூபம் போடுவது நமது நாட்டில் தொன்று தொட்ட வழக்கம். இந்த தூபத்தால் பல வித நோய்க் கிருமிகள் வேரோடு நாசமாகி விடுகின்றன. இப்போது வெளிநாட்டு நாகரிகப்பழக்கத்தால் நம்முடைய நல்வழிகளில் பல மறைந்து விட்டன.

பிரவாஹிகை பக்கத்தில் ஏற்பட்டிருந்தால் ஜலத்தைக் காய்ச்சியே உபயோகிக்க வேண்டும். பட்டணங்களில் ஜலக்குழாய் வஸதியுள்ள இடத்தில் ஜலத்தினால் வியாதிக் கிருமி வேகத்தில் பரவாது. ஓடும் வாய்க்கால்கள் நிறைந்த கிராமாந்தரங்களில் ஜலத்தின் மூலம் வியாதிக் கிருமிகள் சீக்கிரத்தில் மற்றவருக்குப் பரவும். குடி நீரைக் காய்ச்சி அதில் சிறிதளவு பச்சைக் கருப்பூரம் அல்லது படிக்காரம் போட்டு வைத்துக்குடித்தால் ஜலத்தின் மூலம் பிரவாஹிகா காலெரா என்னும் காலாதிசாரம் முதலிய நோய்கள் பரவாது!

சிலர், பாமரர்கள் தங்களுடைய அழுக்கு முதலியவைகளினால் பிறருக்கு வியாதி பரவுமே என்று சிறிதும் கவனியாது வியாதிக்காரருடைய மலம் மூத்திரம் அழுக்குகளை

எல்லோரும் புழங்கும் பொது ஸ்தலங்களில் போடுவது, ஆறு, வாய்க்கால் ஜலத்தில் எறிவது, சுத்தம் செய்வது முதலிய கார்யங்களைச் செய்கின்றனர். இது பெரிய அநீதி. பாபச் செயல். தண்டிக்கத் தகுந்தது. **स्वार्थबुद्धिः परार्थेषु** தன்னுடைய விஷயங்களில் போல பிறர் விஷயங்களிலும் எண்ணம் வேண்டும்.

........विषवत् ज्ञात्वा त्यजेदेवं प्रयत्नतः ।
यथा तेन विपद्येरन् अपि न क्षुद्रजन्तवः ॥

ஒரு வஸ்து விஷமுள்ளதாகத் தெரிந்தால் அதை எப்படி எறிய வேண்டும்? ஈ எறும்புகளுக்குக் கூட இந்த விஷ வஸ்துவினுல் ஆபத்து ஏற்படாதபடி மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டு எறிய வேண்டும் என்று ஆயுர்வேத சாஸ்த்ரம் கட்டளை யிடுகிறது. வியாதியஸ்தர் ஒவ்வொருவரும் தன் வியாதி இதரர்களுக்குப் பரவாமல் கவனிக்க வேண்டியது மிக அவசியம்.

(சிகித்ஸை தொடரும்.)

ஸ்ரீ தந்வந்தரயே நம:

ஆயுர்வேதம்—2,

(க்ருஷ்ணாத்ரேயன்)

பாரதீயர்களின் பலவித விக்ஞான சாஸ்திரங்களை அறிந்தவர்கள் தான் ஆயுர்வேதத்தின் மூல தத்வங்களை அறிய சக்தி அடைவார்கள். ஆயுர்வேதம் தனித்தே நிற்க சக்தியுள்ளது என்பதை முன்பு கூறினோம். இதை மற்ற வைத்ய தத்வங்களின் கலப்புடன் இதை உஜ்ஜீவிக்கமுடியு மென்றாலும் இந்தியாவிற்கெனத் தனியாக நவீன வைத்யக (வைத்யசாஸ்திர)த்தையும் ஆயுர்வேதத்தையும் கலந்து ஓர் புதுவித வைத்யத்தை ஏற்படுத்த முயலுவோம் என ஆரம்பித்திருக்கிறார்கள்.

சமீபத்தில் ஆயுர்வேதத்தைப் படிப்பதில் பலருக்கு பலவிதம் சிரத்தை ஏற்பட்டிருக்கின்றது. இதெல்லாம் நல்லதற்கா வென்பதை அவரவர்களின் சித்தியிலிருந்து மிக எளிதில் கண்டுபிடித்துவிடலாம்.

"தற்சமயம் அனேக ஆயுர்வேத வைத்யர்களும் ஆயுர்வேத கலாசாலைகளும் மிகுந்த சிரத்தையுடன் நவீன வைத்யக முறைகளை நன்கு படித்தறியவேண்டியதையும் அதன்படி கர்மாப்யாஸமும் பயிலவேண்டுமென்பதையும் அவசியமெனக் கருதுகிறார்கள். இந்த ஓர் அரிய சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு பரம்பரையாக நன்மை வழங்கி வரும் ஆயுர்வேதத்தின் நன்மை பயக்கத் தகுந்த சிற்சில அம்சங்களை மட்டும் எடுத்து, நவீன வைத்யகத்தில் புகுத்தி, மற்ற உண்மைக்குப் புறம்பான— பரீக்ஷைக்குத் தாங்காதவைகளான தத்வாபாஸங்களை ஒருங்கே முயன்று விலக்கிவிட்டால், ஆயுர்வேதம் நவீன வைத்யகத்தில் ஒன்றாகக் கலந்து ஆயுர்வேத வைத்யமென்றும் நவீன வைத்யமென்றும் உள்ள வேற்றுமை உணர்ச்சியற்று, வைத்யகம் என்றே

ஆரோக்ய உபகாரகமான சாஸ்திரத்தை ஏற்படுத்தவேண்டும்" என ஒரு சாரார் நமது வைத்யகத்திலும் சிரத்தை காட்டுகின்றனர். இவர்களிடம் சில விஷயங்கள் தெளிவு படுத்தவேண்டியிருக்கின்றன.

மூல தத்வங்களிலும் சிகித்ஸா முறையிலும் மற்றும் சில வழிகளிலும் வேறுபாடு அதிகமாயுள்ள இரண்டு விக்ஞானங்கள் என்றுமொன்ருகாது. மற்ருென்றிடம் தான் கடன்பட்டிருப்பதற்காக தானதுவாக மாறவோ தன்னை அதனுள் மறைத்துக்கொள்ளவோ ஓர் விக்ஞானம் இடம் கொடுக்காது. தற்சமயம் வைத்யக உலகில் பல வைத்யங்கள் உலாவுகின்றன. மேனாட்டில் பல முறைகள் அலோபதிக் வைத்யக முறைகளைத் தழுவியிருக்கின்றன. தனது வழி, மூல தத்வங்கள் இவைகள் போன்றதில் மாறுபாட்டைக் காரணமாகக்கொண்டே தனித்த வைத்யகமுறைகள் என்று அவை நிற்கவில்லையா? அவைகள் உயர்ந்த விக்ஞான முறைகளல்லவா? பிறரிடம் கடன்பட்டதற்காக தனது விக்ஞானத் தன்மையை இழக்கவில்லையே! அப்பொழுது எதற்கு ஆயுர்வேதம் மட்டும் மறைந்து இதர வைத்யகங்களில் புகுந்து தன் ஸ்வரூபத்தைக் காட்டாமலிருக்கவேண்டும்? வைத்யம் என்பது வியாதியஸ்தனை வியாதியிலிருந்து காப்பாற்றி ஆரோக்ய தசையில் வைக்கத் தானே! இவ்வளவில் எல்லா வைத்யகமும் ஒன்றே. ஒவ்வொன்றின் வழியும் மாறுபட்டவை. ஆனல் வியாதியும் வியாதியஸ்தனின் சரீரமும் ஒன்றுதான். அப்பொழுது இம்முறை தேவையில்லையென்ருே, ஒன்ருேடொன்று கலப்பதென்பதோ எதற்காக? ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு சாரருக்கும் ஒவ்வொருவித சரீரவாகிற்கும் ஒவ்வொருவித வைத்யகம் அதிக பலனளிக்கின்றது. ஒரு வைத்யகத்தின் சிகித்ஸா முறைகளோ மூல தத்வங்களோ ஒழுங்காக இல்லையென்ருல் முன் கூறுவது போன்று ஒன்ருேடொன்று கலக்கவேண்டிய அவசியமிருக்கலாம். ஆயுர்வேதத்திற்கு அக்கதி இன்றில்லை; என்றும் ஏற்படாது. நமது மூல தத்வம் அன்றும் இன்றும் என்றுமொன்றே.

அதை மாற்றவேண்டிய ஆவச்யகம் நமக்கு ஏற்படவே ஏற்படாது. சாஸ்திரத்தின் வளர்ச்சி (நவீன ரீதியாக) ஏற்பட ஏற்பட மூல தத்வத்தில் தெளிவும் பிரகாசமும் நம்பிக்கையும் அதிகமாக ஏற்படுகின்றதே! நம்பிக்கையில்லாத் தீர்மானமிருந்தால்தானே அதிகார மாற்றம் ஏற்படவேண்டும். வைத்ய முறைகளும் நன்கு உபயோகமாகவுள்ளவை தான் என்பதை எந்த உண்மை ஹிருதயம் படைத்த இந்தியனும் ஒத்துக்கொள்ளத் தவறமாட்டான். ஆக மற்ற வைத்யகத்துடன் இதைக் கலப்பதென்பது எள்ளளவும் யுக்தமில்லை.

மற்றொன்று; ஆயுர்வேத வைத்யர்கள் உதவிக்கு அதிகமாக நவீன வைத்யர்களை அணுகுகிறார்கள்; அவ்விதம் நவீன வைத்யர்கள் இவர்களை அணுகுவதில்லை. அவ்விதமே அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட சிற்சில யந்திரசஸ்திராதி ஸாதனங்களை, முடிந்தால் முழுவதையும் கிரஹிப்பதில் ஆயுர்வேத வைத்யர்கள் சிறிதும் தயங்குவதில்லை; நவீன வைத்யகர்கள் இவ்விதமில்லை. ஆயுர்வைதிகர்களின் நாடியில் புலப்படும் திரிதோஷதத்வங்களையும் மூத்ரபரீக்ஷையில் தைலபிந்து முறைகளையும் இன்னமும் ரத்னமெனக்கருதும் பலவித விக்ஞான ரஹஸ்யங்களை அவர்கள் என்றும் எடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லையே? இதிலிருந்தே ஆயுர்வேத வைத்யர்களுக்கே தனது வைத்யகத்திலிடம் காலத்திற்கேற்ப வளர்ச்சி இதனிடமில்லையென எண்ணம் நிரூடமாயிருக்கிறது என்பார் சிலர்.

இதற்கு பதிலளிக்கு முன் சிறிது நம்மையே நாம் உள் நோக்கிப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

எல்லாவித விக்ஞானங்களும் அது விக்ஞானம் என்பதற்காகவே நிலைத்திருக்க முடியாது. விக்ஞானத்தின் ஞானம் அனுபவத்தில் ஒற்று வர வேண்டும். அந்த அனுபவத்திற்குப் போதிய கலா ஞானம் தேவை. சாஸ்த்ரீயமல்லாத கலாஞானமும் (அப்யாஸ பாடவம்) கலையில் பரிணமிக்காத விக்ஞானமும் பயனற்றவை. நமது தனுர்

வேதம், காந்தர்வ வேதம் அர்த்த சாஸ்த்ரம் முதலியவை இன்று பயனற்று அண்டுவாரற்றுக் கிடக்கின்றனவே. என்ன காரணம்? அவைகளில் சாஸ்த்ரீயதை பூர்ணமா யிருந்தும் அதை அனுபவத்துக்குக் கொண்டுவரக் கூடிய அக் கலாஞானம் பாரதீயர்களிடம் சிறிதளவுமில்லாதது தானே.

வைத்யகமும் ஒரு சாஸ்த்ரம் தான். சாஸ்த்ர பாகம் மட்டும் இருப்பதனால் அதன் பயன் நமக்கு ஒன்றும் கிட்டாது. வைத்யகத்தின் ஞானத்தை அனுபவத்தில் நாம் காட்ட வேண்டும். அதற்கு கலாஞானம் நமக்கு வேண்டும். एतद्ध्यवश्यमध्येयम्, अधीत्य च कर्माप्यवश्यमुपासितव्यम्; उभयज्ञो हि भिषग्राजार्हो भवति। என்கிறார்கள் நமது ஆசார்யர்கள். கலா ஞானமற்ற சுத்த சாஸ்த்ரியையும், சாஸ்த்ர ஞானமற்ற கலாக்ஞனையும் தூற்றுகின்றனர்.

நவீன வைத்யகத்திற்கு அப்யாஸம் சாஸ்த்ரம் இரண்டிலும் பூர்ண பரிசயம் ஏற்பட்டிருக்கின்றது. ஸாதனங்களைச் செய்வதற்கு பூர்ண விக்ஞானத்திறமையும் அப்பியாஸத் திறமையும் உபயோகப் படுத்தி வைத்யருலகிற்கு எவ்வளவு அதிகமாக பயனளிக்கின்றன என்பதிலேயே பூர்ண ஊக்கமுள்ள பல தொழிற்சாலைகளிருக்கின்றன. உயர்ந்த தத்வ சாஸ்திரிகளால் சாஸ்திரத்தின் சாஸ்திரீயத் தன்மையை விளக்கி விளக்கி அவ்வப்பொழுது கர்மாப்யாஸம் செய்து வரும் வைத்யர்களிடையே பிரகாசம் ஏற்படுத்தப் படுகின்றன.

நம்மைக் கவனிக்குங்கால் நாம் இரண்டு சிறகறுந்த— அல்லது நன்கு சிறகு முளைக்காத ஓர் பறவை போலிருக்கிறோம். கர்மாப்யாஸம் சாஸ்திரங்களில் கூறப் பட்டுள்ளவை போல் பரிசயம் செய்து வைப்பதற்குகந்தவர்கள் நம் நாட்டில் போதிய அளவிலில்லை. சாஸ்திரத்தின் சாஸ்திரத் தன்மையை கர்மாப்யாஸிக்கு பிரசாரம் செய்ய போதிய பிரசாரகர்களில்லை. நமக்கு வேண்டிய ஸாதனங்களைச் சாஸ்திரீய முறையில் தயார் செய்து கொடுக்கப் போதிய

தொழிற் சாலைகள் இல்லை. ஓர் அரிய சாஸ்த்ரம் மட்டுமி ருக்கின்றது. सुबहुश्रुतोऽप्यकृतयोग्यः कर्मसु, अयोग्यो भवति ।

ஆனால் ஆயுர்வேத வைத்யன் இன்று சாஸ்திராதிகர்ம பரிசயமற்றவனாக இருக்கலாம். அதனால் அவ் வகுப்பி லுள்ள சாஸ்திரம் இன்று அர்த்தமற்றதாக இருக்கலாம். 100 வருஷங்களுக்கு முன்னால் இந்த நவீன வைத்யம் ஓர் குவைத்யமாகத் தானிருந்தது. இப்பொழுது சாஸ்திரீயத் தன்மையும், அப்யாஸ பாடவதையும் மிகவும் வளர்ந்து இன்று ஓங்கவில்லையா? ஆனால் நமக்கு அவ்வளவு கஷ் டமுமில்லை. காலவரையும் குறையும் அப்யாஸ பாடவம் மாத்திரம்தான் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

இதற்கு நவீன வைத்யகத்தை நாம் அணுகுகின்றோம். பயிற்சி கிடைத்தவுடன் நமது சாஸ்திரத்தை அனுபவத் திற்குக் கொண்டுவரவேண்டும். உதரத்திற்கு நமது சாஸ் திரத்திலோ அவர்கள் முறையில் சஸ்திர வேதனாதிகளில் யாதொருவித வித்யாஸமுமில்லை. பூர்வோத்தர ஸம்ஸ் காரம் தான் மாறுபடும். கர்மாப்பியாஸம் ஏற்படுத்திக் கொண்டால் மற்றவை நமது சாஸ்திரத்திற்கனுசாரம் செய்வது சுலபம்.

இவ்வழியில் அபிப்ராயபேதமிருக்கிறது. கேவலம் கர் மாப்யாஸத்திற்கு அன்ய வைத்யகத்தை ஆசிரயிப்பதை விட கர்மாப்யாஸத்தை நாமே சாஸ்திரானுஸாரம் செய்து செய்து ஏற்படுத்திக்கொண்டு விடலாமே என்கிறார்கள் சிலர். இது அபாயம் மிகுந்த வழி. மற்ற தத்வ சாஸ் திரங்களின் கர்மாப்பியாஸ வழிபோலல்ல அது. मृत्युना सह योद्धव्यं सन्निपातं जिघांसता । போருக்குத் தகுந்த பயிற்சி யில்லாது போரிடும் சமயத்திலேயே பயிற்சியையும் அடை வது என்பது மதியீனம். சத்ருவிடமிருந்தாலும் ஞானத்தை அடைவதே சிரேஷ்டம். நவீன வைத்ய கத்தை இதற்காக ஆசிரயிப்பதில் ஆயுர்வேதத்திற்கு கௌரவக் குறைவு ஏற்படாது. கேவல கர்ம பரிசயத்

திற்கு மட்டும் நாம் அன்யவைத்யத்தின் கர்மபரிசயம் பயில வில்லை. ஆயுர்வேதத்தின் பலபாகங்கள், நமது கர்மபரிசயத்தின் அக்ஞானத்தால்—அர்த்தமற்றதாகவும் கேவல சாஸ்திரீயத்தன்மையுடனிருக்கின்றனவே அவைகளுக்கு பூர்ணபுஷ்டி களிப்பதற்காகத்தான்.

ஆனால் கர்மபரிசயம் அதில் தேவை என்பதற்காக—பூர்ணமாகாத பாகம் நமக்கு தேவையில்லையென, உதறி மற்றொரு சாஸ்திரத்திலுள்ள அப்பாகத்தை அப்படியே நமது சாஸ்திரத்துடன் இணைப்பது—சரீரத்தில் ஓரங்கம் வியாதியுற்றிருந்தால் அவ்வியாதியைப் போக்க வழிதேடாமல் அந்த அங்கத்தை நீக்கி மற்றொரு சரீரத்தின் அங்கத்தை அப்படியே இணைப்பது போலாகும்.

ஓர் வியாபார நுட்பமறிந்தவன் வியாபாரத்தை நடத்தப் போதிய மூலதனமில்லாமல் கடன்பட்டு வியாபாரம் செய்கிறான். அவன் கடன் வாங்கின பணத்தைக் கொண்டே தனக்கு மூலதனத்தை ஏற்படுத்திக்கொண்டு கடனையும் திருப்பியளித்து தான் ஓர் ஸ்வதந்திரமான வியாபாரி ஆகவேண்டும். கடனைத் திருப்பி அளிக்காது நிலைக்கவைத்து தனக்கு மூலபலம் சரிவர ஏற்படுத்திக் கொள்ளாமலிருந்தால் தானும் கெட்டு தன் வியாபார நுட்பமும் பயனற்றுப்போய் என்றும் மீளாத கடனாளியாகி விடுவான் என்பதையும் ஆயுர்வேத வைத்யர்கள் நன்குணர வேண்டும்.

खरो यथा चंदनभारवाही भारस्य वेत्ता, न तु चन्दनस्य ।
एवं हि शास्त्राणि बहून्यधीत्य चार्थेषु मूढा: खरवद्वहन्ति ॥

என்ற சான்றோரின் வாக்யத்திற்கிலக்காக நாமாளாகாமலிருப்பதற்கு பிரயத்னம் செய்யவேண்டும்.

பாண்டுவில் ஓஜஸ்—ஓர் ஸந்தேஹம்.

[' ஓஜஸ் ' என்ற பதம் ஆயுர்வேதக் கிரந்தங்களில் எல்லா இடங்களிலும் ஏகார்த்தவாசகமா அல்லது பிந்நார்த்தவாசகமா என்பது விமர்சிக்கவேண்டிய முக்கிய விஷயம். இந்த ஸந்தேஹப் பிரச்னம் செய்தவர் ஓஜோ விஷயமான விமர்சம் விசேஷமாகச் செய்திருப்பவர்போல் பிரச்னபத்ததி காட்டுகிறது. ஆதலால் ஸந்தேஹோத்தாபகரே சமாதானம் கூறலாம். பிரஸ்துத பாண்டுரோக நிபந்தகர்த்தாவும் இதர வித்வான்களும் ஓஜஸ்ஸைப்பற்றி வைத்திய சந்திரிகை வாயிலாக விசாரம் செய்யப் பிரார்த்திக்கப்படுகிறார்கள். —ஆசிரியர்.]

சென்ற இதழில் பாண்டுரோகத்தைப் பற்றி எழுதியிருப்பவர், ஓஜஸ் என்பதைப்பற்றிய சிறிய விமர்சத்துடன் பாண்டுவில் க்ஷீணமான ஓஜஸ் எது என்பதையும் ஒரு விதமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார். அம்முறை சாஸ்திர ஸம்மதமாகத் தோன்றினாலும், சாஸ்திரத்தில் ஆங்காங்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ள இந்த 'ஓஜஸ்' என்ற சப்தம் அனேக மாறுபாடுள்ள அர்த்தங்களில் காணப்படுவதையும், தனது கட்டுரையில் விளக்கி, அவ்வித நாநார்த்தகமாக விளங்கும் பொருள் இதுதான் என ஸமன்வயப்படுத்தியிருந்தால் இன்னமும் அழகாயிருக்கும். கீழே குறிக்கப்படும் சந்தேஹங்களுக்கு ஷெ கட்டுரையாளரோ, அல்லது மற்றும் யாராவது ஒரு நிபுணரோ பதில் வெளியிட்டால் மிகவும் உபகாரமாயிருக்கும். எந்த எந்த அர்த்தங்களில் ஓஜஸ் என்று பதப்பிரயோகம் காணப்படுகிறது என்பதை சுருக்கமாகக் கூறுவோம்.

(1) சரக - ஸுச்ருத ஸம்ஹிதைகளில், ஓஜஸ் என்றும், பலம் (बलं) என்றும் கூறப்பட்டுள்ளது. ரஸம் முதல் சுக்ரம் வரையிலுள்ள தாதுக்களின் ஸாரம் எனவும், அதன் குணங்கள் பிராகிருத கபத்தின் லக்ஷணங்களுடன் கூடியிருப்பதும் சரீர தாரணத்திற்கு முக்யமான ஸத்வமாயிருக்கிறதாகக் கூறப்படுகின்றது.

(ச. சூ. 30-9-11-சு. 11 சூ. 15-19)

(2) சரக ஸம்ஹிதையில்—ஆஹார ரஸத்திலிருந்து ரஸம், ரக்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜை சுக்ரம், ஓஜஸ் இவைகள் போஷணமடைகின்றன— (சூ. ஸ்தா. 28-4) என்றிருப்பதனுல், மேற்கண்ட கிரமப்படி சுக்ரத்தின் ஸாரமென்றே, அல்லது சுக்ரத்தைக் காட்டிலும் உயர்ந்த தாதுவென்றே பொருள் படுகின்றது.

(3) சரக ஸம்ஹிதையிலேயே,—ச்லேஷ்மா பிராகிருதமானுல் பலம், விகிருதமானுல் மலம். பலமான ச்லேஷ்மாதான் ஓஜஸ்"— (சூ. 17-117), காணுவதைப் பார்க்க. சரீரத்திலுள்ள பிராக்ருதமான எல்லாவித கபாம்சமும் ஓஜஸ் எனக் கூறலாம்.

(4) பூவிலிருந்து மகரந்தம் சேர்க்கப் படுவது போல சரீர தாதுக்களிடமிருந்து ஓஜஸ் சேர்க்கப் படுகின்றது.

(5) தேன், நெய் போன்ற உயர்ந்த சாரம் தனித் தனியாகவே ரஸம் முதலியவைகளின் உயர்ந்த ஸாரபாகம் ஓஜஸ். அது ஒன்ருகச் சேர்ந்து ஹிருதயத்திலிருந்து பரவுகிறது...

(சு. சூ. 15-19ல் சக்ரபாணியின் உரை.)

(6) அதே இடத்தில் டல்ஹணர்— ":ஓஜஸ்ஸிற்கு ரஸம் எனவும், ஜீவசோணிதம் எனவும், சரீரத்திலுள்ள ஊஷ்மா வெனவும் அர்த்தமென சிலர் அபிப்பிராயப் படுகிருர்கள்" எனக் கூறுகிருர்.

(7) டல்ஹணரே— ரஸாதிகளிலிருந்து தாதூத்பத்தி க்ரமம் கூறுங்கால், "சுக்ரத்தின் ஸூக்ஷ்மாம்சம் ஸ்னேஹ பாகமான தேஜஸான ஓஜஸ்"

(சு. ஸம். சூ. 14—10 உரையில்)

(8) "ஓஜஸ் சுக்ரத்தின் மலம்."

(அஷ். ஹ்ரு. சாரீரம். 3-64)

(9) "சுக்ரத்தின் உபதாது ஓஜஸ்."

(சார்ங்கதர. பூர்வ. 5—18)

(10) "சுக்ரத்தின் ஸாரம் ஓஜஸ்"

(அஷ். சங்கி. சாரீரம் 7–6)

(11) "சுக்ரத்திற்கும் ஓஜஸிற்கும் வித்யாஸம் கூறுவது அவசியமில்லை...... ரஸாதிகளின் ஒவ்வொன்றின் ஸ்னேஹ பரம்பரையில் கடைசியான ஸாரம் சுக்ரம். பாலில் நெய் போல், ஓஜஸ் சுக்ரத்தைக் காட்டிலும் மாறு பட்டதல்ல".

(டல்ஹணர் சு. சூ. 15–21)

(12) "ரஸௌஜஸ், என ரஸத்தின் ஓஜஸ் அல்லது ஓஜஸ் ரூபமான ரஸம்"

(ச. நி. 4–7, சு. சி. 6)

(13) "கோஷ்டத்தில் அக்காலத்தில் அக்னியால் பசிக்கப் படும் [पक्वं] அன்னம் அனேகமாக மலமாக மாறி சிறிது தான் ஓஜஸாக மாறுகிறது.

(ச. சி. 8–41)

(14) "பத்து மஹாஸிரைகள் ரஸாத்மகமான ஓஜஸ்ஸை எல்லா சரீரமும் கொண்டு போகின்றன."

(அ. ஹ்ரு. சா. 3–18)

(15) "எந்த ரஸத்திலிருந்து ஓஜஸ் உண்டாகின்றதோ அந்த ரஸமானது எல்லா தாதுக்களின் இடங்களிலுமிருப்பதால் அந்த ரஸம் அந்தந்த தாது போல் கருதப் படுகின்றது. ஆகையால் எல்லா தாதுக்களின் பால் நெய் போன்ற ஸ்னேஹ ஸாரம் ஓஜஸ்"

(பாவப்ரகாசம்)

(16) எல்லா தாதுக்களிலும் புகுந்து, அந்தந்த தாதுக்களின் பிரபாவத்தை அதிகப் படுத்தும் அந்த தாதுவின் தேஜஸ் ஓஜஸ் எனக் கூறப் படுகின்றது.

(ஹேமாத்ரி. அ. ஹ்ரு. சூ. 11–37)

(17) ரஸத்தில் ஓஜஸ் சப்தமிருந்தாலும், இங்கு சர்வ தாது ஸாரமான ஓஜஸே கிரஹிக்கப் படுகின்றது.

(சக்ரபாணி. ச. சூ. 30–7)

இவை ப்ராசீனர்களின் அபிப்பிராயம்.

நவீனர்கள் அதாவது பிராச்ய பிரதீச்ய வைத்ய பண்டிதர்கள் கூறுவதாவது—

(18) "போஷணிகா (Pituitary Gland)"ன் அந்தர்முகமான ஸ்ராவம். (கணநாத ஸேனர் பிரத்யக்ஷ சாரீரம் 3-வது பாகம் 86 பக்கம்.)

(19) Glycogen என்ற ரக்த ஸாரம் ஓஜஸ் என சரக நிதானத்திலுள்ள ओजश्च मधुरस्वभावं என்ற வாக்யத்தைக் கொண்டு சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்.

சரீரத்திலுள்ள रोगक्षमता அல்லது रोगप्रतिबन्धकशक्तिः (Immunity) தான் ஓஜஸ் என்பது என बलं ह्यलं निग्रहाय दोषाणां (ச. சி. 3–116) என்ற வசனத்தை ஆதாரமாகக் கூறுபவர்கள் சிலர். (சரீரக்ரியா விஜ்ஞானம் ஓஜோ வர்ணநீயம்)

இவ்வளவு ஓஜஸைப் பற்றி அபிப்பிராய பேதங்களிருக்குங்கால் பாண்டுவில் ஓஜஸ் என்ற சப்த மாத்ரத்தால் எதை கிரஹித்துக் கொள்வது என்பது சிறிது விசாரிக்க வேண்டியிருக்கிறது.

பாண்டு ரோகம்.

[வைத்ய விசாரத— எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ]

(முன் மாதத் தொடர்ச்சி)

ரக்தம்.

இது குறைவதற்கு கீழ்க் கண்டவைகள் காரணமாகின்றன.

1. ரக்தக்ஷயம்:— சஸ்த்ராசரணங்களில் ரக்தத்தின் அதிஸ்ருதி, அடிபடுதல் முதலியவைகளில் ஏற்படும் ரக்தச்சேதம், கர்ப்பஸ்ராவம், கர்ப்ப பாதம், பிரஸவகாலத்தில்

ஏற்படும் அதிரக்தஸ்ராவம், ரக்தபித்தம், ரக்தாதிஸாரம், ரக்தார்சஸ், ரக்த குல்மம், ரக்தப்ரதரம், ரக்தவமனம், ப்ரவாஹிகை இவைகளினுல் சரீரத்திலிருக்கும் ரக்தம் குறைந்து விடுகின்றது. க்ஷீணமான ரக்தத்தை ஈடு செய்ய (சரீர சக்தி குறைந்திருக்கும் காலத்தில்) ரஸத்தால் முடிவதில்லை. ரக்தம் குறைந்தவுடன் அதன் நிமித்தமாக பாண்டு நிறம் முதலிய வர்ண விக்ருதிகள் ஏற்படுகின்றன. பித்தத்தின் ஆச்ரயமான ரக்தம் குன்றியவுடன் பித்தமும் குறைகின்றது. கபத்தை மேலிடச் செய்து கபஜமான பாண்டுதா முதலிய விகாரங்கள் பரவுகின்றன.

2. அதிசாரம் முதலியவைகளில் சரீரத்திலிருக்கும் ஆப்யாம்சம் குறைவதால் ரக்தத்திலிருக்கும் ஆப்யாம்சமும் குறைகின்றது. ரக்தத்தில் வேறுவித கெடுதல்கள் இல்லாவிட்டாலும் ரக்தத்தினளவு குறைவதால் இயற்கையான வர்ணம் மாறுபடுகின்றது.

3. ரஸத்திலிருந்து ஓஜஸ் ஏற்படாததால்— ரக்த போஷகமான ஸாரபாகம் குன்றுகின்றது. இதற்குக் காரணம் ரஸத்தை ரக்தமாக மாற்றும் தாத்வக்னி துர்பலமாகுவது. ரஸம் ரக்தமாக மாருததால், ரஸத்தின் மலபாகம் அதிகமாகின்றது. கபம் அதிகமானவுடன் பாண்டு நிறம் கபநிஷ்டீவனம் முதலிய கபம் அதிகமானுல் உண்டாகும் விகிருதிகள் உண்டாகின்றன.

4. ரக்தம் சிற்சில விஷங்களால் முறிபட்டுவிடுவது— 1. லோஹங்கள்— ஈயம், காரீயம், யசதம் முதலிய கனிகளில் வேலை செய்பவர்களுக்கு அடி லோஹங்களின் ஸூக்ஷ்மாம்சங்கள் வாயு ஜலங்களில் கலக்கப் பட்டு சரீரத்தில் கலந்து ரக்தத்தை முறிக்கின்றன. இதைத் தான் வங்கம் முதலியவைகள் அசுத்தமாக சாப்பிட்டால் ஏற்படும் தீய குணங்களாக ரஸ கிரந்தங்களில் கூறப் படுகிறது. 2. க்ருமிகள்— பக்வாசயம் முதலியவைகளில் கிருமிகள் அதிகமாக புண் செய்து ரக்தத்தையும் துஷ்டமான விஷங்களால் தூஷிக்கச் செய்கின்றன. 3. வெகு நாட்பட்ட விரணங்க

ளில் ஏற்படும் ஒரு வித விஷம் ரக்தத்தை முறிக்கின்றது. 4. பாக்கு முதலிய சில பதார்த்தங்கள் ரக்தத்தை முறிக்கின்றன.

பித்தம்.

இவ் வியாதி பித்தம் அதிகரிப்பதால் ஏற்படுகிறது என்ற ஓர் பிரவாதம் இருக்கிறது. பித்தம் குறைவதால் எனச்சிலர். பித்தம் தன்னளவிலிருந்தும் குறைந்திருக்கிறதா, அதிகரித்திருக்கிறதா, அல்லது தன்னளவிலிருந்தும் வேறு கோபித்த தோஷத்தால் வேறிடம் மாற்றப் பட்டு அவ்விடமிருக்கும் பித்தத்துடன் சேர்ந்து அதிகமாகக் கருதப் படுகின்றதா? என்றெல்லாம் சந்தேஹம் ஏற்படுகின்றது.

பித்தம் இவ்வியாதியில் என்ன மாறுதல்கள் ஏற்படுத்துகின்றது என்பதைக் கவனித்தால் இவை விளங்கும். பித்தம் சரீரத்தின் நிறத்தையும் சோபையையும் உஷ்ணத்தையும் தன்னளவிலிருந்து வளர்த்தும் இல்லாவிடில் குறைத்தும் அதிகப் படுத்தியும் தனது ஸ்வரூபத்தை விளக்குகின்றது. இவ்வியாதியில் நிற மாறுதல் தான் பிரதானமான விகிருதி. அனேகமாக இவ்வியாதியில் நிறம் வெளுத்தும் சோபை குன்றியும் சரீரத்திலுள்ள உஷ்ணம் குறைந்தும் அக்னி பலம் குன்றியும் அதிகத் தூக்கமும் காணப் படுகின்றன. இவைகளெல்லாம் பித்தம் குறைந்திருப்பதைக் காட்டுகின்றன. ஆனால் பித்தஜ பாண்டுவில் மஞ்சள் நிறம் அதிகப் பட்டும் ஜ்வரம், எரிச்சல், விஸ்போடம் முதலியவை காணப் படுவதால் பித்தம் அதிகரித்திருப்பதைக் காணலாம். ஆக, வாதஜ கபஜ பாண்டுவில் தன்னளவிலிருந்தும் பித்தம் குறைந்திருக்கிறது. வியாதி ரக்த க்ஷயத்தில் ஏற்படக் கூடியது. ஆசிரயமான ரக்தத்தின் நாசத்தால் ஆசிரயியின் நாசமும் ஸஹஜம் தான்.

(தொடரும்.)

ஸ்ரீ தந்வந்தரயே நம:

ஆசிரியர்

विजयतामायुर्वेदः—

வைத்திய சந்திரிகைக்கு இந்த ஸஞ்சிகையுடன் 8வது வருஷம் பூர்த்தியாகிறது. வைத்திய சந்திரிகை தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தினுதரவில் பிரசுரிக்க ஆரம்பித்து ஒரு வருஷமாகிறது. ஸ்ரீரங்கம் ஸ்ரீவிலாஸம் அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பட்டு, ப. ஸ்ரீ. எஸ். எம். ஸௌந்தரராஜய்யங்கார் அவர்களால் பிரசுரிக்கப்பட ஆரம்பித்து இந்தப் புத்தகத்துடன் மூன்று மாஸங்களாகின்றன. சந்திரிகை ஏற்கனவே அச்சாகிக் கொண்டிருந்த மதுரை அச்சுக்கூடத்தில் ஸம்ஸ்கிருத அச்சுக்கு வஸதியின்மையால் ஆயுர்வேத ஸம்பந்தமான நிருபங்கள் ஸம்ஸ்கிருதத்தில் சில வார்த்தைகளாவது இல்லாமல் சோபிப்பதில்லை என்ற குறை ஸ்ரீவிலாஸ அச்சுக்கூடத்தில் கிடையாது. இதில் தமிழ் ஸம்ஸ்கிருதம் இங்கிலீஷ் மூன்று பாஷைகளிலும் அச்சுக்குப் பூர்ண ஸௌகர்யமிருக்கிறது. பத்திரிகையின் பிரகாசகர், அச்சுக்கூடம் மாற்றுவதில் கவர்ன்மெண்டாரின் அநுமதி ஸம்பாதிப்பதில் காலதாமதமேற்பட்டதினுல் சந்திரிகா சில மாஸங்களைச் சேர்த்து போடவேண்டியதாகி விட்டது. இனிமேல் பத்திரிகை பிரதி ஆங்கிலமாதம் 7உக்குள் தவருமல் வெளிவந்து கொண்டிருக்கும்.

ஆயுர்வேதாபிவிருத்தி இரண்டு வகையாகச் செய்யவேண்டியிருக்கிறது. வைத்தியர்களுக்குள் சாஸ்திரீய விஷயங்களை சர்ச்சை செய்து ஞானம்சத்தை விருத்தி செய்வது ஒன்று. பொதுஜனங்களின் ஹிருதயத்தில் ஆயுர்வேதத்தின் பெருமையையும், பிரயோஜனத்தையும் பதியச் செய்வது இரண்டாவது. இந்த இரண்டாவது நோக்கத்துடனே வைத்திய சந்திரிகையின் ஆரோக்கிய சந்திரிகா அநுபந்தம் தனியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் லக்ஷ்யஸித்திக்கு வைத்திய ஸஹோதரர்களுடைய ஸம்பூர்ண ஸஹயோகமும், ஸஹாயமும் ஸகல விதத்திலும் அத்யாவசியம். ஸஹாயத்தின் பிரகாரங்கள் பலவிதங்கள். மண்டலத்திற்கு அங்கத்தினர் சேர்த்தல், வைத்ய சந்திரிகைக்கும்

ஆரோக்கிய சந்திரிகைக்கும் கட்டுரைகள் எழுதியளித்தல். ஸ்வாநுபவத்தில் ஏற்படும் முக்கிய ரோகிகளுடைய சிகித்ஸா விசேஷங்களைச் சந்திரிகையில் பிரகாசம் செய்தல், ஆரோக்கிய சந்திரிகா அநுபந்தாம்சத்தை தமது நண்பர்களிடமும், சிகித்ஸைக்கு வரும் நோயாளிகளிடமும் காண்பித்து அவர்களையும் வைத்திய சந்திரிகைக்கு சந்தாதாரராகச் சேரச்செய்தல் இவை போன்றன.

இதில் கடைசியில் சொல்லியுள்ள விஷயம் பரம முக்கியம் வாய்ந்தது. பொது ஜனங்களுக்கு ஆயுர்வேதத்தில் அபிமானமுண்டுபண்ண வேண்டியது அவசியம், பரம அவசியம். ஆயுர்வேதத்தின் மகத்துவம் வாய்ந்த தத்துவங்களை இவர்களுக்குப் புலப்படச் செய்து கொண்டே யிருக்க வேண்டும், இப்பொழுது வெளி நாட்டு வைத்தியத்தின் பாரிபாஷிகச் சொற்கள் ஆபால வ்ருத்தம் ஜனங்கள் எல்லோருக்கும் பொதுவாகத் தெரிகின்றன. ஆயுர்வேதப்படி பெயர்கள் விசேஷமாய் பிரசாரத்திலில்லாததால் தெரியவேயில்லை. டைபாய்டு, டிஸெண்டெரி என்று சொன்னால் தெரிகிறது. ஆந்தரிக ஸன்னிபாதம், பிரவாஹிகா என்றால் தெரியாது. இதைக் கிரமேண ஜனங்களிடம் பரவச் செய்யவும் ஆயுர்வேதப்படி பத்யாபத்யங்களையும் ஸ்வஸ்த வ்ருத்தங்களையும் பிரசாரம் செய்யவும் ஒவ்வொரு வைத்தியரும் ஆரோக்கிய சந்த்ரிகாம்சத்தை மட்டிலாவது தமது நண்பர்களையும் ரோகிவர்க்கத்தையும் படிக்கச் செய்வது, முடிந்தவரை அனுஷ்டிக்கச் செய்வது என்பதை விரதமாகக் கொள்ளும்படிக்குப் பிரார்த்தனை செய்யப் படுகிறது.

பொது ஜனங்களுக்கு உபயோகமான ஆரோக்கிய சந்த்ரிகை அனுபந்தத்துக்காகப் பொது ஜனங்களை வைத்திய சந்த்ரிகைக்கு சந்தாதார்களாகச் சேரச் செய்தால் பெரிய உபகாரம் மண்டலத்துக்கும் ஆயுர்வேத ஸேவைக்கும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஏற்படும். துயரத்தைப் போக்கி சரீர சுகத்தை அளிக்கும் வைத்தியரான உங்களுடைய வார்த்தையை உங்கள் வியாதியஸ்தர்கள் ஒரு நாளும் அலக்ஷியம் செய்ய மாட்டார்கள். ஆதலால் தமிழ் படிக்கத் தெரிந்த உங்கள் நோயாளிகளைக் கூடிய வரை சந்த்ரிகைக்கு மெம்பர்களாகச் சேர்ப்பதில் முயலுங்கள்.

लोकाः समस्ताः सुखिनो भवन्तु ।

முதல் துர்விநியோகம்.

ஆரோக்கிய மந்த்ரி மிகுந்த சிரமத்துடன் தேசிய வைத்திய விஷயமாய் இவ் வருஷத்தில் ஐந்து லக்ஷம் ரூபாய் செலவு செய்ய ஒதுக்கி வைத்துள்ளார். இந்தத் தொகையை எந்தெந்த விதம் செலவு செய்யலாமென்றுள்ள விஷயத்திற்கு தேசத்தின் வைத்திய நிலை நன்கறிந்துள்ள வைத்தியாபிமானம் பூர்ணமாய்ப் பெற்று வேலை செய்யத் தெரிந்த ஒரு தகுந்த மனிதரை நியமித்திருக்க வேண்டும். தேசிய வைததியத்தின் துர்ப்பாக்கியம் வைத்திய வாசனையே அறவே அற்ற இத் தேசத்தின் வைத்திய நிலை யறியாத ஒரு சட்ட நிபுணப் பெரியவரை மைசூர் ராஜ்யத்திலிருந்து கொண்டு வந்து தேசிய வைத்ய விஷயமான சர்வாதிகார சிகரத்தில் சேர்ப்பித்துள்ளது. இந்த சட்ட நிபுணருக்கு நிர்வாஹம் நிரம்பத் தெரியுமாம். வைத்ய வ்ருத்தி வழிகளிலே நீண்ட கால அனுபவம் வாய்ந்த வைத்யர்களின் யோஜனைக்குச் செவிசாய்க்காதிருத்தலே ஒரு பெரிய நிர்வாஹ சக்தி தானே. இவருடைய அபார நிர்வாஹ சாமர்த்தியம் வைத்யாபிவிருத்தி விஷயமாய் இவர் இதுகாறும் செய்துள்ள ஆலோசனைகளும் நடவடிக்கைகளும் நிதர்சனமாக எடுத்துக் காட்டுகின்றன. ஐந்து லக்ஷம் ரூபாயை இந்த வருஷத்துக்குள் செலவழித்தாக வேண்டாமா? ஆவடியில் இருக்கும் ஆரோக்கியாசிரமத்தின் அபிவிருத்திக்கு ரூ. 7000 மான்யம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆயுர்வேதாபிவிருத்திக்காக சர்க்கார் தொகை முதன்முதலில் நல்ல உசிதமான வகையில் வினியோகம் செய்யப் பட்டுள்ளதா என்பதைப் பொதுஜனங்கள் உணர முடியாவிடினும் ஆவடி ஆரோக்கியாசிரமத்தையும் அதன் சொந்தக்காரரையும் அறிந்தவர் எளிதில் அறிவார்கள்.

இருப்பது ஐந்து லக்ஷம் ரூபாய். சர்க்காரே இவ்வருஷத்தில் நான்கு ஆயுர்வேதக்கல்லூரிகள் உடனடியில் ஆரம்பிக்கத் திட்டம் போட்டுக் கார்யம் மிக ஜரூராக நடந்து கொண்டிருக்கிறது. ஐந்து லக்ஷம் ரூபாய் ஒரு கல்லூரி ஸ்தாபனத்துக்கே கண்டிப்பாய்ப் போதாது, இவ்வித நிலையில் ஆவடி ஆரோக்கியாசிரமத்துக்கு ரூ. 7000 மான்யம் என்பது முதலில் முதல்தர துர்விநியோகம் அல்லவா?

॥ श्रीः ॥

॥ श्रीधन्वन्तरये नमः ॥

॥ त्रिशिरःपुर्यायुर्वेदसभा ॥

सुधाकुम्भकराम्भोजः करुणानन्दमूर्तिमान् ।
अव्यान्नः सर्वरोगेभ्यः श्रीमान् धन्वन्तरिः प्रभुः ॥

श्रीरङ्गाभिजनानां श्री. वि. सुब्रह्मण्यार्याणां निरन्तरनिरतिशयायुर्वेदसेवया अस्मद्दक्षिणमण्डले पुष्कलफलं समासाद्य संतुष्टान्तरङ्गा इयं त्रिशिरःपुर्यायुर्वेदसभा स्वानन्दातिशयमाविष्कुर्वन्ती स्वाभिनन्दनात्मकं "आयुर्वेदसेवाप्रवीणः" इति विरुदं समर्प्यात्मानं कृतार्थयन्ती आशास्ते भूयः पुण्यतमस्यायुर्वेदस्य सेवार्थं स्वास्थ्यसमृद्धं दीर्घमायुः श्रीधन्वन्तरिप्रसादेन श्रीसुब्रह्मण्यार्येभ्यो भूयादिति

इत्थम् आयुर्वेदसेवाप्रसन्नाः,
त्रिशिरःपुर्यायुर्वेदसभ्याः ।

१३ वार्षिकोत्सवे समर्पकः,

त्रिशिरःपुरी	ईश्वरार्यः	नटराजशास्त्री
२६-१०-४६	मन्त्री	सभापतिः ।

திருச்சி ஆயுர்வேத ஸபா.

13-வது வார்ஷிகோத்ஸவம்.

திருச்சி ஆயுர்வேத ஸபாவின் 13-வது வார்ஷிகோத்ஸவம் 1946-ளு அக்டோபர்-மீ 26-உ சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு திருச்சி ஆயுர்வேத யூனியன் கட்டிடத்தில் நடைபெற்றது. ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் V. சுப்ரமணிய அய்யர் அவர்கள் தலைமை வஹித்தார்.

முதலில் ஸ்ரீதந்வந்தரி பகவானின் பிரார்த்தனை நடைபெற்றது. பிறகு சபைத்தலைவர் ஸ்ரீமான் V. B. நடராஜ சாஸ்த்ரிகள் ஸ்ரீமான் சுப்ரமணிய அய்யர் அவர்கள் ஆயுர்வேதாபிவிருத்திக்குச்செய்துள்ள சேவைகளைப்பாராட்டிப் பேசி, அவருக்கு சபையின் சார்பில் "ஆயுர்வேத ஸேவா ப்ரவீண:" (आयुर्वेदसेवाप्रवीण:) என்ற பிருதை அளித்தார். அந்த பிருதை ஸ்ரீமான் சுப்ரமணிய அய்யர் அவர்களும் சந்தோஷத்துடன் ஸ்வீகரித்துக் கொண்டார்.

பிறகு சபா காரியதரிசி ஸ்ரீ T. S. ஈசுவர அய்யர் கடந்த வருஷத்தின் அறிக்கையை வாசித்தார்.

கீழ்க் கண்ட நிர்வாஹ ஸமிதி பின்பு தேர்ந்தெடுக்கப் பட்டது.

1.	ஸ்ரீரங்கம் ஆயுர்வேத ஸேவா ப்ரவீண V. சுப்ரமணிய அய்யர்	ஸபாத்யக்ஷர்.
2.	ஸ்ரீரங்கம் ஆயுர்வேத பூஷணம் P. G. கணபதி சாஸ்திரிகள்	உபாத்யக்ஷர்
3.	திருச்சி. ஸ்ரீ V. R, சுப்ரமணிய அய்யர்	கார்யதர்சி

நிர்வாஹ ஸமிதி அங்கத்தினர்கள்.

4. திருச்சி ஆரிய வைத்யன் K. S. வாரியர்
5. ,, ஆயுர்வேத சிரோமணி N. வெங்கடேச சர்மா
6. ,, ஸ்ரீ S. ராகவ ராவ் A. L. I. M.
7. கரூர் ஆயுர்வேதசிரோமணி R. V. ராமய்யர்

பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

தீர்மானம். 1. சென்னை சர்க்கார், இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தை காலேஜ் ஆக்கும் யோசனையை இச்சபை வரவேற்பதுடன், 1946-ம் வருஷத்திலேயே சென்னை இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தை காலேஜ் அந்தஸ்துக்கு உயர்த்தி, 1947-லிருந்து தக்கபடி காலேஜ் வேலை ஆரம்பிக்க அதற்கு வேண்டிய படுக்கை வசதிகள், அதிகப்படியான உபாத்தியாயர்கள் நியமனம், கட்டடம் கட்டுதல், ஆராய்ச்சி செய்ய நிபுணர்கள் நியமனம், காலேஜ் படிப்புக்கு வேண்டிய instruments வாங்குதல், காலேஜுக்கு வேண்டிய புத்தகங்களை அஷ்டாங்கத்திலும் எழுத வைத்தியர்களை நியமித்தல் முதலிய ஏற்பாடுகளை சென்னை சர்க்கார் உடனே செய்யவேண்டுமென்று இந்த சபை கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் 2, தற்சமயம் மாகாணத்தில் நடைபெறும் பல்வேறு ஆயுர்வேத வைத்யப் பள்ளிக்கூடங்களுக்கும் சர்க்கார் மான்யம் (grant) கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறது.

பின்பு திருச்சி ஆயுர்வேத சிரோமணி ஸ்ரீ R. வெங்கடேச சர்மா அவர்கள் "ஜீவாணுவாதம்" என்பது பற்றி ஸம்ஸ்க்ருதத்தில் உபந்யஸித்தார்.

பிறகு தஞ்சை ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ ஆயுர்வேதசிரோமணி அவர்கள் "ஆரோக்கியத்தின் அடிப்படைத் தத்துவங்கள்" என்பது பற்றித் தமிழில் உபந்யஸித்தார்.

திருச்சி தெய்வ நெறிக் கழகம் உபதலைவர் ஸ்ரீ சி. சிவராம கிருஷ்ண அய்யர் அவர்கள் "உடல் கலையும் யோகாஸநமும்" என்பது பற்றிக் கூறுகையில், யோகாஸநங்களின் உபயோகத்தைப் பற்றிச் சொல்லிவிட்டு சில யோகாஸநங்களைச் செய்து காட்டினார்.

தலைவர் தமது முடிவு ப்ரஸங்கத்தைச் செய்தார். வந்தனோபசாரத்துடன் கூட்டம் மாலை 7 மணிக்கு முடிவுற்றது.

T. S. ஈசுவரய்யர், ஸபாமந்த்ரீ.

Printed and Published by Dr. S. M. Sundararajacharya at the Sri Vilasam Press, Srirangam.